**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**MCOP.No.19/2023 P.W.1**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | |
|---|---|
| பெயர் | பிரியா |
| க/பெ. | கார்த்திக் |
| வயது | 31 |
| வசிப்பிடம் | எண்.220, பூவையார் நகர், மெயின் ரோடு, ஆயப்பாக்கம் |
| தொழில் | தனியார் நிறுவனத்தில் வேலை |

**முதல் விசாரணை 15.10.2025**

நான் இந்த வழக்கில் 1ம் மனுதாரர். இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். 21.09.2017 அன்று குற்ற எண்.536/2017-ல் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1. 21.09.2017 தேதியிட்ட பிரேத பரிசோதனை அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.2. முதல் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஆர்.சி.புத்தகம் ம.சா.ஆ.3. முதல் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் ம.சா.ஆ.4. முதல் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடு உரிமம் ம.சா.ஆ.5. இறந்துபோன நபரின் ஓட்டுநர் உரிமம் ஒளி நகல் ம.சா.ஆ.6. இறந்துபோன நபரின் வாரிசு சான்றிதழ் ஒளி நகல் ம.சா.ஆ.7. முதல் மனுதாரரின் ஆதார் அட்டை ஒளி நகல் ம.சா.ஆ.8. 2வது மனுதாரரின் ஆதார் அட்டை ஒளி நகல் ம.சா.ஆ.9. 3வது மனுதாரரின் ஆதார் அட்டை ஒளி நகல் ம.சா.ஆ.10.

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>2ம் எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இறந்துபோன நபரின் பிறப்பு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை. விபத்து 2017ம் ஆண்டு நடந்துள்ள நிலையில் 6 ஆண்டுகள் கழித்து மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் மாமனாரை ஏன் இந்த மனுவில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அவர் எங்கு போனார் என்று தெரியவில்லை அதனால் மனுவில்

சேர்க்கவில்லை. என் கணவர் இருசக்கர வாகனம் மற்றும் கார் ஓட்டுவதற்கான இலகுரக வாகன ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் தனிப்பட்ட ஒரு நபருக்கு கார் ஓட்டுநராக வேலை செய்து வந்தார். என் கணவருக்கு சம்பளம் ரொக்கமாக தான் கொடுப்பார்கள். சம்பள ரசீதை தாக்கல் செய்யவில்லை. விபத்து நான் சொன்னவாறு நடக்கவில்லை என்றும், என் கணவர் தான் வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்து எதிரில் வந்த முதல் எதிர்மனுதாரர் வாகனத்தை கவனிக்காமல் மோதிவிட்டார் என்றால் சரியல்ல. என் கணவர் மீது தவறு இருந்த காரணத்தினால் தான் 6 வருடம் கழித்து இந்த நஷ்டஈடு மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து காலத்தில் முதல் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், எனவே 2ம் எதிர்மனுதாரர் எந்தவித நஷ்டஈடும் கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் கணவர் விபத்து சமயத்தில் தலைகவசம் அணிந்திருந்தார். அது குறித்து எனது மனுவிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். அவ்வாறு தலைகவசம் அணிந்திருந்தால் விபத்தை தவிர்த்திக்கலாம் என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை